
Land Transport Authority
We Keep Your World Moving

# ERP 2.0

## IU சாதனத்திலிருந்து ERP 2.0-வின் On-Board-Unit சாதனத்திற்கு மாறுவது பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அனைத்து விவரங்கள்



# முற்றிலும் புதிய OBU

ERP 2.0 நடப்புக்கு வருவதால், வாகன ஓட்டுனர்கள் தங்களின் in-vehicle (IU) சாதனத்திற்குப் பதிலாகப் புதிய On-Board Unit (OBU) சாதனத்தைப் பொருத்த வேண்டும். OBU சாதனத்தைப் பற்றியும், அதை எவ்வாறு பொருத்துவது என்பதைப் பற்றியும் சில முக்கிய விவரங்களை இங்கே காணலாம்.




## 2 வகையான OBU சாதனங்கள் உள்ளன:

**A** பெரும்பாலான வாகனங்களுக்கு மூன்று பாக OBU சாதனம்




**B** மோட்டார்சைக்கிள்களுக்கு மட்டும் ஒரு பாக OBU சாதனம்




### முக்கிய அம்சங்கள்:

- ERP கட்டணம் வசூலிக்கும் இடங்களில் ERP கட்டண விவரங்கள், கட்டண விழிப்பூட்டல்கள், அட்டை இருப்புத்தொகை ஆகிய விவரங்களைக் காட்டும்.
- பள்ளி வட்டாரங்கள், மூத்தோர் வட்டாரங்கள், வேகக் கண்காணிப்பு கேமராக்கள், பேருந்து வழித்தடங்கள் மற்றும் இன்னும் பல இடங்களில் எச்சரிக்கைத் தகவல்களைப் பெறலாம் (மூன்று பாக OBU சாதனத்திற்கு மட்டும்).
- பின்னிலை கட்டணமுறைகள் மற்றும் செல்லுபடியாகும் CEPAS அட்டைகள்* (NETS Flashpay ப அல்லது NETS / EZ-link மோட்டோரிங் அட்டைகள்) மூலம் ERP கட்டணமும் வாகன நிறுத்தத்திற்கான கட்டணமும் செலுத்தலாம்.
- எதிர்காலத்தில், நெரிசலற்ற நேர கார்கள் மற்றும் பழங்கால வாகனங்களுக்கான பயன்பாட்டு உரிமங்கள், சோதனைச்சாவடி கட்டணங்கள், சாலையோர வாகன நிறுத்துமிடக் கட்டணங்கள் ஆகியவற்றைக் கட்டுவதற்கும் பயன்படுத்தலாம்.


### மூன்று பாக OBU சாதனத்திற்குப் பொருந்தும்

தொடுதிரை காட்சியை நிறுவுமாறு நாங்கள் பரிந்துரைத்தாலும், அதை நிறுவாமல் இருப்பதற்கான தெரிவும் உங்களுக்கு உள்ளது. நீங்கள் பொருந்தத்தக்க கைப்பேசி செயலிகள் மூலம் ERP தகவல்களைப் பெறலாம்.

*குறிப்பு: ரொக்க அட்டைகளும் SimplyGo EZ-link அட்டைகளும் OBU சாதனத்திற்குப் பொருந்தாது.

# உங்களது OBU சாதனத்தைப் பொருத்தும்  முறை

உங்கள் வாகனத்தில் OBU சாதனத்தைப் பொருத்த பின்வருமாறு செய்யவேண்டும்.




## 1 ஒரு பட்டறையைத் தேர்ந்தெடுக்கவும்

நிலப் போக்குவரத்து ஆணையத்தின் அங்கீகாரம்பெற்ற பொருத்தமான பட்டறையைத் தேர்ந்தெடுக்க, QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள் அல்லது **go.gov.sg/book-obu** என்ற இணையத்தளத்தை நாடுங்கள்.

## 2 நிறுவலுக்கான சந்திப்பை முன்பதிவு செய்யவும்




நீங்கள் தேர்ந்தெடுத்த பட்டறையை நேரடியாக அழைப்பதன் மூலமோ அல்லது வாட்ஸ்அப் (WhatsApp) மூலமோ தொடர்பு கொள்ளுங்கள்.



## 3 பட்டறைக்குச் செல்லுங்கள்

OBU செயலாக்கியை வைப்பதற்கான சாத்தியமான இடங்களை தொழில்நுட்ப வல்லுநர் உங்களுக்கு விளக்குவார். உங்கள் விருப்பத்தை உறுதிசெய்த பிறகு, உங்கள் வாகனத்தை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு அவர்கள் குறிப்பிடும் நேரத்தில் திரும்பலாம்.

## 4 பொருத்திய பிறகு



இப்போது உங்கள் OBU சாதனத்தைப் பயன்படுத்தலாம். பரிவர்த்தனை வரலாற்றையும் உங்கள் OBU உத்தரவாதத்தின் காலாவதித் தேதியையும் பார்க்க, **go.gov.sg/obu-eservices** என்ற இணையத்தளத்தை நாடுங்கள்.

நீங்கள் கைப்பேசி செயலியைப் பயன்படுத்துவதாக இருந்தால், உங்கள் கைப்பேசியை OBU சாதனத்துடன் இணைப்பதற்கு முன், OneMotoring மின்னியல் சேவைகள் மூலம் கைப்பேசியை நீங்கள் பதிவு செய்ய வேண்டும்.

# உங்களது OBU சாதனத்துடன் பணம் செலுத்தும் முறை

நீங்கள் செல்லுபடியாகும் CEPAS அட்டைகளுடன் (எ.கா. NETS / EZ-link வாகன அட்டைகள்) தொடர்ந்து பணம் செலுத்தலாம். மின்னியல்மயமான கார்நிறுத்தும் முறை (EPS) நடப்பில் இல்லாத தனியார் கார்நிறுத்துமிடங்களில் பணம் செலுத்த தனியாக ஓர் அட்டையை வைத்திருங்கள். வசதியான முறையில் உங்கள் அட்டையில் பணம் நிரப்ப, நெட்ஸ் தானியக்கப் பணம் நிரப்பல் சேவைக்குப் பதிவு செய்யும்படியும் நாங்கள் ஊக்குவிக்கிறோம்.

Land Transport Authority
We Keep Your World Moving

For more information about ERP 2.0
and the OBU installation process, please visit:

**go.gov.sg/erp2-1m**

**go.gov.sg/erp2-guide**

**Call Assist Service: 6377 2255**

If you require further support or
have any other questions,
contact us through the form below.

**go.gov.sg/erp2-contactus**

@WeKeepYourWorldMoving @ltasg

www.lta.gov.sg @LTASingapore

